# A Service of Praise and Thanksgiving to God Almighty for the dedicated and loyal Services of our Jubilarians



Mr. Anton Chandrakumar Francis



Miss. Antonette Jeyajothy Ganesan



Mr. Mahesu Parthiban

*On*

*Wednesday 19th of February 2020*

*At 11.30 a. m.*

*The Cathedral, Vaddukoddai.*

## Call to Worship : **The Rev.Dr.D.S.Solomon**

(Principal)

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள். அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். கர்த்தருடைய பரிசுத்தவான்களே அவருக்குப் பயந்திருங்கள். அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. கர்த்தரை நான் எக்காலத்திலும் தோத்திரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும். என்னோடு கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். நாம் எல்லோரும் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.

## Lyric: All

**இராகம்: ஹம்சத்வனி**

**பல்லவி**

எத்தனை நாவால் துதிப்பேன் - எந்தன்
கர்த்தாவுன் கருணையைப் பாடிப் புகழ்ந்து

**அனுபல்லவி**

நினைக்க நினைக்க என்றன் நெஞ்சமெல்லாமுருகும்
நின்னை சொல் மாலையால் சூட்டி மகிழும் - எத்தனை

1. நம்பினோரல்லோ அறிவார் – என்றன்
தம்பிரானே உன்றன் கெம்பீர குணம்
அம்பரா உன் அன்பின் அதிசய நடத்துதல்
சம்பூரண சவரட்சணை செல்வம்
- எத்தனை நாவால் துதிப்பேன் -

2. பிரார்த்தனை கேட்கும் பெருமானே - இந்த
நரர் பலவீனம் பாராதருள் கோனே
சரணென்றுன் செம்பாத மலரடி சேர்ந்தோர்
கரத்தைப் பிடித்துக் கவலை தீர்த்தோனே
- எத்தனை நாவால் துதிப்பேன் -

3. துணிவாய் என் நெஞ்சே தீவிரமாய் - மிக
பணிவுடன் ஆண்டவன் செயல் நினைந்து
எண்ணிலடங்காது இறைவனின் கிருபை
விண்ணவன் சேவையில் வீரமாய் செல்லு
- எத்தனை நாவால் துதிப்பேன் -

## Prayer of Thanksgiving : The Rev.P.Thevarasa

(Chaplain)

நட: எல்லாம் வல்ல கடவுளே! எல்லா நல் ஈவுகளையும் அளிக்கிறவரே!. உமது ஒரே ஆவியால் பல்வேறு திருப்பணிகளைத் திருச்சபையில் அமைத்திருக்கிறீர். திருப்பணிக்கென்று நீர் அழைத்த ஆதி மிஷனரிமாருக்காகவும், அவர்களது திருப்பணியில் நிறுவப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரிக்காகவும், இந்த ஸ்தாபனத்தின் மூலமாக நமது கிராமமும், யாழ்ப்பாணக் குடாநாடும், இலங்கை நாடும் அடைந்த பல்வேறு நன்மைகளையும் நினைவு கூர்ந்து உம்மைத் துதிக்கிறோம்.

சபை: நன்றியால் துதி பாடு – என் இயேசுவை
நாவாலே என்றும் பாடு

நட: 1823ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் இத்தாபனத்ததை வழி நடாத்தி வந்த தயவிற்காகவும், காலத்திற்குக் காலம் ஞானமுள்ள ஊழியரை நீர் அனுப்பி அவர்களுக்கூடாக நாம் பெற்ற நன்மைகளுக்காகவும், இந்த நாட்களிலும் உமது ஞானத்தையும், கிருபையையும், வல்லமையையும் போற்ற எங்கள் மத்தியில் ஞானமுள்ள ஊழியர்களை எழுப்பி எங்கள் விசுவாசத்தையும், கிருபையையும் பலப்படுத்தி வருவதற்காகவும், அப்படிப்பட்டோர் மூலம் உம்முடைய நாமம் இன்னும் மகிமை அடைவதற்காகவும் உம்மைத் துதிக்கிறோம்.

சபை: நன்றியால் துதி பாடு – என் இயேசுவை
நாவாலே என்றும் பாடு

நட: யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவனாகவும் 1994ம் ஆண்டு தொடக்கம் கல்லூரியின் நிரந்தர ஆசிரியராகவும் 2009ம் ஆண்டு இணை துணை கனிஷ்ட அதிபராகவும் 2010ம் ஆண்டு இணை துணை அதிபராகவும், 2016ம் ஆண்டிலிருந்து பிரதி அதிபராகவும் கடமையாற்றி வருபவராகவும், மாணவர் ஆளுநர் குழுவினை வழிநடத்துபவராகவும், சாராணர் ஆசிரியராகவும், க.பொ.த உயர்தர மாணவர் மன்றத்தின் ஆசிரிய ஆலோசகராகவும், பழைய மாணவர் சங்க இணைப்பாளராகவும், விடுதி பாதுகாவலராகவும், தென்னிந்திய திருச்சபையின் சமயக்கல்விக் குழு இயக்குனராகவும், ஆதீன சங்க செயற்குழு உறுப்பினராகவும், வட்டுக்கோட்டை பேராலயத்தின் செயலாளராகவும், கடந்த 14 வருடங்களாக சிலுவைக் காட்சியான இயேசுவின் பாடுகளின் காட்சியை நெறியாள்கை செய்பவராகவும், கல்லூரியின் விழாக்களினை முன்னின்று நடாத்துபவராகவும், கடமை கண்ணியம், கட்டுப்பாடு, பொதுநலம் மற்றும் ஆலய காரியங்களிலும் முன்னின்று தன்னை ஒறுத்து செயற்படுபவராகவும் கல்லூரியில் கடந்த 25 ஆண்டுகள் திரு அன்ரன் சந்திரகுமார் பிரான்சிஸ் அவர்கள் செய்து வருகின்ற பணிகளுக்காக கடவுளே உம்மை துதிக்கின்றோம்.

சபை: நன்றியால் துதி பாடு – என் இயேசுவை
நாவாலே என்றும் பாடு

நட: யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவியாகவும், 1994ம் ஆண்டு பிரதம பாடசாலையின் நிரந்தர ஆசிரியராகவும், வட்டமேசை செயலாளராகவும், சிறுவர் நாடகங்களின் இயக்குனராகவும், பிரதம பாடசாலையின் தமிழ்த்துறை தலைவராகவும், பிரதம பாடசாலையின் மாணவர் ஆளுநர் குழுவின் செயலாளராகவும், சிறுகதை வித்தகராகவும், Hitchcock இல்ல ஆசிரியராகவும், கலைமானி மற்றும் முதுகலைமானி (தமிழ்) என்னும் பட்டங்களை முறையே பெற்று சிறந்த சிறுவர் வழிகாட்டியாகவும் கடமை கண்ணியம்

கட்டுப்பாட்டு அர்ப்பணிப்புடன் கடந்த 25 ஆண்டுகள் செல்வி அன்ரனிற் ஜெயஜோதி கணேசன் அவர்கள் செய்து வருகின்ற நல்ல பணிகளுக்காக கடவுளே உம்மைத் துதிக்கின்றோம்.

சபை: நன்றியால் துதி பாடு – என் இயேசுவை
நாவாலே என்றும் பாடு

நட: யாழ்ப்பாணக் கல்லூரியில் 1995 முதல் நிரந்தர சித்திர ஆசிரியராக அனுமதி பெற்று சித்திர கலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், தனக்கென ஓர் உன்னத கலைத்துறை பாரம்பரியத்தை மாணவர்கள் மத்தியில் இடம்பிடித்து வைத்திருக்கின்ற திரு.மகேசு பார்த்தீபன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவைக்காகவும் கல்லூரியின் பல நிகழ்வுகளிலும் அவரது கைவண்ணத்துக்காகவும், கலை அம்சங்களை வடிவமைப்பதிலும் மாணவர்களை கண்டிக்கவேண்டிய இடங்களில் கண்டித்து புன்சிரிப்புடன் மாணவர் மத்தியில் கலை உணர்வை வளர்க்கும் சேவைக்காகவும், வட்டமேசை செயலாளர், தலைவராக மட்டுமல்லாது இளம் சமூகத்தினர் மத்தியில் சிறந்த சித்திரக்கலை ஆசிரியராகவும், கடந்த 25 ஆண்டுகளாக அவர் செய்து வருகின்ற பணிகளுக்காக நன்றியுடன் கடவுளே உம்மைத் துதிக்கின்றோம்.

சபை: நன்றியால் துதி பாடு – என் இயேசுவை
நாவாலே என்றும் பாடு

## Scripture Readings :

1. Deuteronomy (உபாகமம்) 8:1-10
   – Mass.A.Thomas Thuvarangan
2. 1st Corinthians ( 1 கொரிந்தியர்) 13: 1 - 13
   – Mrs.B.N.Mohan
3. St. Matthew (தூய.மத்தேயு) 25: 14 – 30 –
   – Ms. G. N. Muthurajah.

## Litany: Mr.N.V.Jeyakumar

நட: உம்மை அறிந்தவர்களின் மனதிற்கு ஒளியும், உம்மில் அன்புகூரும் ஆன்மாக்களுக்கு உயிரும், உமக்குத் தொண்டு செய்கிறவர்களின் உள்ளத்திற்குப் பலமுமாகிய எங்கள் தந்தையே உம்மைச் சேவிப்பதே மெய் சுயாதீனம், உம்மை மெய்யாய் அறியவும், எங்களுக்குத் துணை செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசுவின் மூலம் ஏறெடுக்கும் ஜெபத்தை.

சபை: ஏற்றுக் கொண்டருளுமே தேவா இப்போ
ஏழையென் ஜெபத்தை இயேசுவின் மூலம்

நட: பிள்ளையாய் பிறந்து, பிள்ளைகளின் மதிப்பை உணர்த்திய இயேசுக் கிறிஸ்து நாதரே, எங்கள் கல்லூரியிலுள்ள எல்லா மாணவர்களும் உண்மையும், சுத்திரமும், உயர்ந்த நோக்கமும் உடையவர்களாக இருக்கவும், நீர் பிற்காலத்தில் அவர்களுக்கு விதிக்கும் ஸ்துதியில் தங்கள் கடமைகளை நிறைவேற்றும் படி அவர்களைப் பக்குவப்படுத்தவும், நல்லொழுக்கத்திலும், உமக்குப் பயப்படும் பயத்திலும் தமது மாணாக்கருக்கு நல் முன் மாதிரி காட்டவும் செய்தருள வேண்டுமென்றும், எங்கள் பாடசாலை அபிவிருத்திக்காகச் செய்யப்படும் சகல ஏற்பாடுகளையும் ஆசீர்வதித்து நடத்த வேண்டுமென்றும் நாம் ஏறெடுக்கும் ஜெபத்தை …………

சபை: ஏற்றுக் கொண்டருளுமே தேவா இப்போ
ஏழையென் ஜெபத்தை இயேசுவின் மூலம்

நட: எல்லாம் வல்ல கடவுளே! நீரே இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிறீர். எல்லா வல்லமையும் அதிகாரமும் உம்மிடத்திலிருந்தே புறப்படுகின்றது. எங்கள் கல்லூரி ஆளுகைக் குழுவினர், நிருவாகிகள் ஆகியோருக்கு வேண்டிய சேவை மனப்பான்மையையும், மாணாக்கருக்கு வேண்டிய கீழ்ப்படிவையும், நல்லொழுக்கத்தையும் கொடுத்தருள வேண்டுமென்றும் நாங்கள் கேட்கும் போது

சபை: ஏற்றுக் கொண்டருளுமே தேவா இப்போ
ஏழையென் ஜெபத்தை இயேசுவின் மூலம்

நட: விசேடமாக இன்று வெள்ளி விழாக் காணும் உமது அடியார்களை ஆசீர்வதித்துப் பலப்படுத்த வேண்டுமென்றும், நீங்காத உமது சமூகம், உமது ஒத்தாசையும், இருக்க வேண்டுமென்றும் உம் பணியை இவர்கள் மென்மேலும் தொடர்ந்து செய்ய ஏற்ற தருணங்களைக் கொடுத்து உமது சித்தம் நிறைவேறக் கிருபை கூர்ந்தருள வேண்டும் என்றும் நாம் ஏறெடுக்கும் ஜெபத்தை ..........

சபை: ஏற்றுக் கொண்டருளுமே தேவா இப்போ
ஏழையென் ஜெபத்தை இயேசுவின் மூலம்

## Dedication: The Rev. P. Thevamithiran

நட: எல்லாம் வல்ல ஆண்டவரே! நீரே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறீர். உம்மிடத்தில் நாம் ஒளி பெற்று மற்றவர்களுக்கு ஒளியாகவும், வழிகாட்டியாகவும் இருக்க எம்மைப் பாவித்தருளும், நீரே வாழ்வின் ஒளியென்பதை உணராது இருக்கும் மக்களுக்கு ஒளியைக் கொண்டு செல்லவும், அறியாமை என்னும் இருளில் இருக்கும் மக்களுக்கு அறிவு என்னும் ஒளியைப் புகட்டவும் எங்களை ஒப்படைக்கின்றோம்.

சபை: ஒளியென உலகில் உதித்தவர் இயேசு
ஒளியென விளங்க அழைக்கிறார் அழைக்கிறார் நம்மை
ஓடியே வருவோம் ஒருமித்தே உழைப்போம்
ஓரிறை அவரை உண்மையாய்த் தொடர்வோம்

நட: அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தங்கள் உரிமைகள், உடைமைகள் உறவினர்களை இழந்து வாழும் மக்களுக்குச் சேவை செய்ய, எங்களை அர்ப்பணிப்பணிக்கின்றோம்.

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இல்லிடமின்றி அலைந்து திரியும் மக்களுக்கு நம்மிடத்தில் உள்ளதைப் பகிர்ந்து கொள்ள நாம் முன் வருகின்றோம். உலகத்திலே இருளை நீக்கி ஒளியைக் கொடுக்க, எம்மைக் கருவிகளாக்கும் படி உம்மிடத்தில் எம்மை ஒப்புக் கொடுக்கின்றோம்.

சபை: இருளதின் பிடியில் இருக்கின்ற உலகை,
அருளவர் துணையால் விடுவித்துக் காப்போம்
மருளதை நீக்கும் மன்னவர் அவரின் ஆ… ஆ… ஆ…
கருணையின் நிழலில் கடமைகள் புரிவோம்

நட: நல்ல கர்த்தாவே! நாங்கள் உமது தகுதியின் படி உம்மைச் சேவிக்கவும், எங்கள் பிரயாசத்தைக் கணிக்காமல் முயலவும், எங்கள் காரியங்களை எண்ணாமல் போரிடவும் எங்கள் ஆறுதலைத் தேடாமல் உழைக்கவும், உமது சித்தத்தைச் செய்கிறோம் என்னும் அறிவின்றி வேறு பலனை நாடாமலிருக்கவும் எங்களுக்குப் போதித்தருளும்.

-ஆமென்-

## Hymn: All

Amazing grace! How sweet the sound
That saved a wretch like me!
I once was lost, but now am found
was blind, but now I see

‘Twas grace that taught my heart to fear,
And grace my fears relieved;
How precious did the grace appear
The hour I first believed!

Through many dangers, toils, and snares
I have already come;
‘Tis grace has brought me safe thus far,
And grace will lead me home.

The Lord has promised good to me,
His word my hope secure;
He will my shield and portion be
As long as life endures.

**Presentation of Holy Bible :**

**The Rev. Dr. D. S. Solomon**
**(Principal)**

**Special Song: Choir**

**இராகம்:**

**எடுப்பு**

வெள்ளிவிழா மூலவர்கள்!! நீவிர்
வித்தைதெளி ஆசான்கள்!!

**தொடுப்பு**

பள்ளிக்கூடம் இதில்
படித்த பழம் மாணவராம் ; ...........
(வெள்ளி விழா மூலவர்கள்.....)

**முடிப்பு**

கடும் உழைப்பு, விடாமுயற்சி, கலைத்துவமும்;
படிப்பறிவு, விளையாட்டு, பணித்திறனும்;
அணிதிரண்டு நிற்கும் நம் இணை முதல்வனாகப்
பணி செய்யும் ‘சந்திரன் பிரான்சிசும்’ இங்கே;
(வெள்ளிவிழா மூலவர்கள்.............)

நூற்புலமை, வாசிப்பு, நுண்ணறிவுத் திறனும்;
இருமொழிகள் கற்பிக்கும் ஆசிரியப் பேறும்;
தன்னகத்தே கொண்டவளாய்த் தலை நிமிர்ந்து நிற்கும்
‘பெண்ணரசி’, ‘ஜெயஜோதி’ அவர்தானும் இங்கே;
(வெள்ளிவிழா மூலவர்கள்............)

சிற்போவியக் கலையும் சிக்கெடுக்கும் கணக்கும்;
அற்புதமாய் இணைந்து அவதாரம் எடுத்தே;
கல்லூரி உலாவந்து, களைகட்டச் செய்யும்;
'மகேசு பார்த்திபன்' எனும் மானுடனும் இங்கே
(வெள்ளிவிழா மூலவர்கள்.............)

**Sermon: The Rt. Rev. Dr. D. S. Thiagarajah Ph.D.**
(Bishop)

**Lyric : All**

**பல்லவி**

ஆண்டவா எந்தன் சேவைக்கு
அடியேன் அர்ப்பணம் செய்யத் தூண்டுமுன்
ஆவி அருள்வாய்

**அனுபல்லவி**

என்னைத் தியாகிக்க ஏவும்
உன் அனல் மூட்டிடுவாய்
இந்நிலம் தன்னில் மாளும்
மனுமக்கள் மீட்பிற்காக

**சரணங்கள்**

புசிக்கப் பண்டமில்லாமல்
பூவில் இல்லமுமே அன்றி
நசிந்து நலிந்து நாட்டில்
கசிந்து கண்ணீர் சொரிந்து
தேசமெல்லாம் தியங்கும்
நேச மக்கள் சேவைக்கே
நிமலா எனை ஏற்றுக் கொள்
-ஆண்டவா உந்தன்-

வறுமை வன்கடன் வியாதி
குருட்டாட்டம் கட்சி கடும்
அறிவீனம் அந்தகாரம்
மருள் மூடி மக்கள் வாழும்
தருணமிக் காலமதால்
குருநாதா உனதன்பை
அருள்வாய் அடியேனுக்கே

-ஆண்டவா உந்தன்-

அருமை இரட்சகா உந்தன்
அரும்பாடு கண்ணீர் தியாகம்
பேரன்பு பாரச்சிலுவை
சருவமும் கண்ட எந்தன்
இருதயம் நைந்துருகி
வெறும் பேச்சாய் நின்றிடாமல்
தருணம் என்னையே தந்தேன்

-ஆண்டவா உந்தன்-

உலகே உனதாயினும்
தலை சாய்க்கத் தாளில்லாமல்
நலமே புரிந்து திரிந்தாய்
எல்லாம் துறந்த யான் உன்
நல்லாவி கொண்டுழைக்க
வல்லா உன் சிலுவை
அல்லால் வழி வேறுண்டோ

-ஆண்டவா உந்தன்-

**Prayer & Benediction:**

The Rt. Rev. Dr. D. S. Thiagarajah Ph. D.
(Bishop)

## BAND OF JUBILARIANS

1. Mr. T. Kaneshamoorthy
2. The Rev. Dr. D. S. Solomon
3. Mr. N. V. Jeyakumar
4. The Rev. P. Thevamithiran